<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.</u>

<u>C.C.No. 87/2018</u>

2026 ம்ஆண்டு ஜூலை மாதம் 14 ஆம் நாள் செவ்வாய் கிழமை அரசு தரப்பு சாட்சி–07, திரு.இளங்கோவன் என்பவரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் பிரமாணச் சட்டம் பிரிவு 4 ன்படி) திரு.செ.சாஸ்தா குமரன்,மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.இளங்கோவன் | வயது | : | 58/26 |
| த.பெ/ க.பெ. | : | சிங்காரவேலு | தொழில் | : | உதவி ஆய்வாளர் |
| ஊர் | : | தா.பழூர் காவல் நிலையம் | நிலை | : | PW07 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

( எதிரி ஆஜர் )

<u>முதல் விசாரணை:</u>

1) நான் தற்போது தா.பழூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் திருமதி.லட்சுமிபிரியா என்பவரின் கையொப்பம் மற்றும் கையெழுத்து எனக்கு தெரியும். அவர் தற்போது இறந்துவிட்ட காரணத்தினால், இவ்வழக்கின் காலதாமதத்தை தவிர்க்கும்பொருட்டு, அவர் தயார் செய்து வைத்திருக்கும் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2) கடந்த 07.01.2018 ம் தேதி காவல் உதவி ஆய்வாளர் திருமதி.லட்சுமிபிரியா அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது, ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையிலிருந்து வரப்பெற்ற தகவலினைப் பெற்று, அங்கு சென்று,

உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கோவிந்தம்மாள் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று, நிலைய குற்ற எண் 06/2018, ச/பி.294(b), 324, 506(2) இதச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அதசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3) பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜி, மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகசர் அதசாஆ.6 ஆகவும், மாதிரி வரைபடம் அதசாஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

4) பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்ததில், குற்ற சம்பவம் உண்மையென தெரியவந்து எதிரியை தேடியபோது, 07.01.2018 ம்தேதி 10.00 மணிக்கு காரைக்குறிச்சி பேருந்து நிறுத்தம் அருகில் வைத்து கைது செய்து, நிலையம்கொண்டு வந்து, திரேக பரிசோதனை செய்து, நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

5) அ.சா.1 க்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள் திரு.சையதுராஜ் மற்றும் திரு.செந்தில்குமார் ஆகியோரை என்பவரை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிந்து, அவர்கள் கொடுத்த விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ் பெற்றார்.

6) பின்னர் எதிரி மீதான விசாரணையை முடித்து, 29.03.2018 ம் தேதி எதிரியின் மீது ச/பி.294(b), 324, 506(2) இதச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்களுக்கெதிரான வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்படி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரியின் தரப்பில் கு/வி.**

1) எதிரி அடிக்க பயன்படுத்தியதாக சொல்லப்படும் கட்டையை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு கைப்பற்றப்பட்டிருந்தால் அவற்றை நீதிமன்றத்தில் ஒப்படைத்திருப்பார் என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளர் கட்டையை கைப்பற்றியுள்ளார் ஆனால் அதை அவர் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. அ.சா.1 புகார் வாக்குமூலத்திலும், போலீசார் விசாரணையிலும் அ.சா.1 ன் தோள்பட்டையில் காயம் ஏற்பட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

2) அ.சா.1 தனக்கு இடுப்பில் காயம் இருந்ததாக முதல் விசாரணையிலும் புகார் வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளார். ஆனால் மருத்துவர் அ.சா.1 க்கு இடுப்பில் காயம் இருந்தாக குறிப்பிடவில்லை, உண்மையிலேயே உதவி ஆய்வாளர் சரியாக புலன் விசாரணை செய்திருந்தால், அ.சா.1 க்கு இடுப்பில் காயம் ஏற்பட்டதா இல்லையா என்று தெளிவாக குறிப்பிட்டிருக்க முடியும் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் தயார்செய்யப்படவில்லை என்றாலும் இந்த வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து தயார்செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் உதவி ஆய்வாளர்கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளர் அவர்கள் சம்பவம் இடம் செல்லாமல் சாட்சிகளை சரியாக விசாரணை செய்யாமல் எதிரியின் மீது தவறாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் அ.சா.1 க்கு ஏற்பட்ட காயத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.1 க்கு அவரது வீட்டு

அருகாலில் இடித்துக்கொண்டதால்தான் தலையில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

/ உண்மை நகல் /
ஒம்/-ப.கனிமொழி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,
ஜெயங்கொண்டம்.